F1/587/2026/WCO 3

மனை உட்பிரிவு வரைபடம்
நிபந்தனைகளுக்குட்பட்டு
அங்கீகரிக்கப்பட்டது.

06/03/2026

<u>சாலை சான்று:</u>

உதவி ஆணையர்,வார்டுக்குழு அலுவலகம்-III திருச்சிராப்பள்ளி மாநகராட்சி -அவர்களின் கடிதம் ந.க.எண்:எப்1/2203/2023/ம-III நாள்:26-06-2023-ல் அணுகுசாலைக்கான சான்றின் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்படுகிறது.




## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம் - திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - அரியமங்கலம் கோட்டம் - வார்டு-AF - பிளாக்-29 - கொட்டப்பட்டு கிராமம் - (பழைய ச.எண்:53/1pt) நகர அளவு எண்: 9/3 -ல் அமையும் குடியிருப்பு மனைஉட்பிரிவிற்க்கான திட்ட அனுமதி ஒப்புதல் வரைபடம்.

(திட்டப்பகுதி)

அளவுத்திட்டம் : **1 : 800**

கோப்பு எண் : SWP/6GNHILB6/59804/2026/TCP

வ

<u>குறிப்புகள்:</u>

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு - 1560.00 ச.மீ

மனைப்பிரிவு இடத்தின் எல்லை

நிலையிலுள்ள சாலை

கோரிய மனைகள் - 8

ஒதுக்கிய மனைகள் - 8

<u>பொது ஒதுக்கீடுகள்:</u>

பூங்கா பரப்பிற்கான 10% இடத்திற்கு பதிலாக அரசு வழிகாட்டி மதிப்பின்படி அதற்கான தொகை மனுதாரரால் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது

<u>கட்டிட பக்க திறவிட வரம்பு</u>

அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழக்கல் துறை, நாள் 04.02.2019 (TNCDER -2019)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டிட பக்க திறவிடம் விடப்பட வேண்டும்.

<u>மூலை முடக்கு:</u>

சாலையின் அகலம் 12.0மீ. வரை 1.50மீ x 1.50மீ மற்றும் சாலையின் அகலம் 12.0மீ. மேல் 30.50மீ. வரை 3.00மீ x 3.00மீ என்ற அளவில் விடப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள்:</u>

1) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கையும் இல்லை என்பதையும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2) அரசாணை எண்: 71 ஊ.வ. (ம) உ. துறை நாள்: 16.06.2003 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சியினால் வழங்கப்படும் சான்று மற்றும் அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்:4.2.2019 -ன் படிவங்களின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

3) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

4) விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வானையின் நகலோடு, நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6' x 4' அளவிளான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6) உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

7) The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

8) அரசாணை எண: 79 வீ.வ. (ம) ந.வ. துறை, நாள்: 4.5.2017 -ன் படி இந்த உத்தேச மனைப்பிரிவிற்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 -ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்தியச் சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47 -ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைத்து, செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

உதவி ஆணையர்,வார்டுக்குழு அலுவலகம்-III திருச்சிராப்பள்ளி மாநகராட்சி -அவர்களின் கடிதம் ந.க.எண்:எப்1/2203/2023/ம-III நாள்:26-06-2023-ல் அணுகுசாலைக்கான சான்றின் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்கண்ட கடிதம் மற்றும் அணுகுசாலையினை உறுதி செய்து கொண்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

<u>குறிப்பு:</u>

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ/ந.ஊ.இ.இ.(திமா) எண்:12/2026

திட்ட அனுமதி எண்:12/2026

(இ-சைன்)

இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

Signature valid